இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் - 2020

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் கலந்துறையாடியுள்ள விடயங்களின் முக்கியத்தவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றை வழங்க போதிய மற்றும் பொருத்தமான சான்றுகளை பெற்றுக் கொள்ள என்னால் முடியவில்லை.

1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள முடியவில்லை.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க நடாத்தப்படும் கணக்காய்வின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவது எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், அபிப்பிராயத்தை மறுப்பதற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்க போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள முடியவில்லை.

1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

	குறித்த நியமத்துடனான தொடர்புடன் கூடிய இணக்கமின்மைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 1 இன் பந்தி 25 மற்றும் 26 பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான இயலுமை மீதான மதிப்பீடொன்றை முகாமைத்துவம் மேற்கொள்ள வேண்டிய போதும் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் தொடர்ச்சியான தேறிய நட்டம், நிதி மற்றும் நிதிக்கு சமமானவற்றில் தேறிய வித்தியாசம் மறை பெறுமானத்தை எடுத்துள்ளமை, வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை ரூபா 1,050 மில்லியனாக காணப்படுகின்றமை மற்றும் வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய வைகளின் பெறுமானத்தில் ரூபா 18 மில்லியன் செயற்படாத மீதி காணப்படுகின்றமை தொடர்ந்தியங்கும் தன்மையின் மீதான நிச்சயமற்ற தன்மை காணப்படும் பொருண்மையான சந்தேகங்களை ஏற்படுத்தும் சம்பவங்கள் மற்றும் நிலைமை காணப்படுவதும் நிதிக்கூற்றுக்கள் மூலம் அவ்வாறன தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான மதிப்பீடொன்றை மேற் கொண்டு வெளிப்படுத்தி இருக்கவில்லை.	முயற்சியின் தொடர்ந்தியங்கும் தன்மை மீதான பிரச்சினையொன்று தற்போது ஏற்படடாததுடன் இது தொடர்பாக தகவல்களை எதிர்வரும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது.	இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 7 இன் பந்தி 17 (இ), (ஈ) பிரகாரம் நிதி செயற்பாடுகளினால் ஏற்படும் காசுப்பாய்சலை வேறாக வெளிப்படுத்த வேண்டிய போதும் மீளாய்வாண்டில்	கணக்காய்வாளர்கள் குறிப்பிடுவதன் பிரகாரம் எதிர்வரும் கணக்குகளை தயாரிக்கும் போது நிதி செயற்பாடுகளினால்	இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நிதி செயற்பாடுகளினால் உருவாகும் காசுப்பாய்ச்சல்

	பெற்றுக் கொண்ட ரூபா 245,000,000 ஆன கடன் மற்றும் ரூபா 60,000,000 ஆன கடன் மீள் செலுத்துதல் நிதிக்கூற்றுக்களில் வெவ்வேறாக வெளிப்படுத்தாது அதன் தேறிய தாக்கத்தின் மீது ரூபா 185,000,000 தொகை காசுப்பாய்சல் ஊடாக இனங்காண நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	உருவாகும் நிதி மற்றும் நிதியீட்டல் நிதிக்கொடுப்பனவு காசுப்பாய்சல் கூற்றில் வெவ்வேறாக இனங்கண்டு சமர்ப்பிக்க முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது.	வெவ்வேறாக வெளிப்படுத்தப்பட வேண்டும்.
(இ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 பந்தி பிரகாரம் சொத்தொன்றின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயுட்காலம் ஒவ்வொறு அறிக்கையிடல் காலப் பகுதியின் இறுதி திகதிக்கு மீளாய்வு செய்ய வேண்டிய போதும், தொடர்ந்தும் பயன்படுத்திவரும் கிரயம் ரூபா 154,139,500 ஆன மற்றும் தேறிய பெறுமதி பூச்சியமான மோட்டார் வண்டி தொடர்பாக நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுத்து தேவையான செம்மையாக்கங்களை நிதிக்கூற்றுக்களில் வழங்கியிருக்கவில்லை.	இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன பிரகாரம் பயன்படுத்திவரும் சொத்துக்களின் பயனுள்ள ஆயட்காலத்தை மீளாய்வு செய்து எதிர்வரும் கணக்குகள் தயாரிக்கும் போது கணக்கீட்டு மதிப்பீடுகளில் வித்தியாசமொன்றாக இலங்கை கணக்கீட்டு நியமம் 08 பிரகாரம் செம்மையாக்க முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது.	இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் சொத்துக்களின் மிகுதி பெறுமதி பயனுள்ள ஆயுட்காலத்தை ஒவ்வொறு அறிக்கையிடல் காலப் பகுதியின் இறுதி திகதிக்கு மீளாய்வு செய்ய வேண்டும்.
(ஈ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 74(அ) பந்தி பிரகாரம் பிணை வைக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் போதியளவாக வெளிப்படுத்த வேண்டிய போதும், 2013 ஆண்டு முதல் 2014 அண்டு வரை கூட்டுத்தாபனத்தால் பெற்றுக் கொண்டுள்ள ரூபா 75,000,000 ஆன வங்கி மேலதிக பற்று வசதியை பெற்றுக் கொள்ளவதற்காக பிணையாக வைக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக எவ்வித வெளிப்படுத்தல்களும் நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை.	வங்கி மேலதிக மற்று மற்றும் கடன் வசதிகளை பெற்றுக் கொள்வதற்கான பிணையாக வைத்த சொத்துக்கள் தொடர்பாக இலங்கை வங்கியனால் அனுப்பப்பட்ட கடிதத்தை இத்துடன் அனுப்புகிறேன்.	இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் பிணை வைக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் போதியளவாக வெளிப்படுத்த வேண்டும்.
(உ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 63 பந்தி மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் 36 இன் 09 பந்தி பிரகாரம் செயலிழந்த நிலையில் காணப்படும் ரூபா 252,352,500 ஆன குளிரூட்டல் கூடம் தொடர்பாக நியமம் பிரகாரம் செய்ய வேண்டிய செம்மையாக்கல்களை செய்திருக்கவில்லை.	கருத்து தெரிவிக்கப்படவில்லை	இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் சொத்துக்கள் தெடர்பாக தேவையான செம்மையாக்கல்களை செய்ய வேண்டும்.
(ஊ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 74(ஆ) பந்தி பிரகாரம் 2017 ஆண்டு	மீன் பதப்படுத்துவதற்காக கட்டிடமொன்றை	இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம்

	முதல் நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு செல்லப்படும் பெறுமதி ரூபா 28,130,402 ஆன நடைமுறை வேலைகள் நிதி நிலைமைகூற்றில் ஆதன பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் கீழ் கண்கீடு செய்துள்ளதால் இந்த பெறுமதியால் ஆதன பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மிகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	நிர்மாணிக்க ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும் தற்போது அதன் முன்நடவடிக்கைகள் கைவிடப்பட்டுள்ளன. இது தொடர்பாக தேவையான கணக்கீட்டு செம்மையாக்கல்களை எதிர்வரும் ஆண்டில் மேற்கொண்டு நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்க முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது.	நடைமுறை வேலைகளை கணக்கீடு செய்ய வெண்டும்.
(எ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 36 இன் 9 பந்திக்கு முரணாக நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காட்டியுள்ள 2003 ஆண்டில் ரஷ்யக் கம்பனி ஒன்றுடன் செய்து கொண்ட ரூபா 110,000,000 ஆன இணைந்த ,முதலீடு தற்போது செயலிழந்த நிலையில் காணப்பட்ட போதும் அது தொடர்பாக மதிப்பீடொன்றை மேற்கொண்டு குறித்த ஒதுக்கத்தை மேற்கொண்டிருக்கவில்லை.	இணைந்த முயற்சியொன்றிற்காக நிறுவனத்தினால் ஒப்படைக்கப்பட்ட ஆதனங்களை மீண்டும் சுவீகரிக்க நீதிமன்ற செயற்பாடுகளை எடுத்துள்ளதுடன் அது தொடர்பாக தேவையான கணக்கீட்டு செம்மையாக்கல்களை எதிர்வரும் கணக்காண்டில் மேற்கொண்டு போதியவாறு கணக்குகளில் வெளிப்படுத்த முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது.	இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் குறித்த முதலீடு தொடர்பாக மதிப்பீடொன்றை மேற்கொள்ள வேண்டும்.
(ஏ)	இல்ங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 08 இன் 21,22,23 மற்றும் 24 பந்தி பிரகாரம் 221, 22, 23 மற்றும் 24 பிரகாரம் முயற்சியொன்றின் அறிக்கையிடப்பட்ட துணைப் பிரிவுகளின் வருமான செலவுகள் உள்ளடங்களாக இலாபம் அல்லது நட்டத்தை நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்த வேண்டிய போதும் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று உள்ளடங்களாக 56 பிரிவுகளின் இலாப நட்டத்தை வெவ்வேறாக வெளிப்படுத்தியிருக்கவில்லை.	எதிர்வரும் கணக்குகளை தயாரிக்கும் போது கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுக்களில் மற்றும் ஏனைய பிரிவுகளின் இலாப நட்டத்தை வெவ்வேறாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது.	இல்ங்கை நிதி அறிக்கையிடல் நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஐ)	இல்ங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9 இன் பந்தி 5.1.1 பிரகாரம் நிறுவமொன்று நிதிச் சொத்துக்களை பிரதானமாக நியாயமான பெறுமதிக்கு அளக்க வேண்டியதுடன் தொடர்ந்தும் நிவாரண	இலங்கை கணக்கீட்டு நியமம் 9 இன் 5.1.1 பந்தி பிரகாரம் தேவையான கணக்கீட்ட செம்மையாக்கல்களை	இல்ங்கை நிதி அறிக்கையிடல் நியமம் பிரகாரம் நிதிச் சொத்துக்களை ஆரம்ப நியாயமான

	வட்டி விகிதத்தின் கீழ் கடன் வழங்கும் போது, கடனின் நியாயமான பெறுமதி அதன் பெயரளவு தொகைக்கிடையே வித்தியாசத்தை ஊழியர் நலன்களாக கருதி இலங்கை கணக்கீட்டு நியமம் 19 பிரகாரம் கணக்குகளில் இனங்காண வெண்டியதுடன் நிதி நிலைமைகூற்றில் காண்பித்துள்ள ரூபா 4,443,883 ஆன ஊழியயர் கடன் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் இடர் கடன் மீதி ரூபா 4,443,883 ஆன போதும் கடன் மீதி பொழிப்பு பதிவேடடின் பிரகாரம் அந்த மீதி ரூபா 3,619,439 ஆனதில் ரூபா 824,443 ஆன வித்தியாசமொன்றானது.	எதிர்வரும் கணக்குகளில் மேற்கொள்ளவும் நிவாரண வட்டி விகிதமாக வழங்கும் ஊழியர் கடனை இலங்கை கணக்கீட்டு நியமம் 19 பிரகாரம் எதிர்காலத்தில் கணக்கீடு செய்ய முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது. மேலும் இடர் கடன் மீதியில் காணப்படும் முறன்பாடுகளை எதிர்வரும் கணக்குகளிற்கு செம்மையாக்க முகாமை செய்யப்பட்டுள்ளது.	பெறுமதிக்கு அளக்க வேண்டியதுடன், இடர் கடன் மீதியிலுள்ள வித்தியாசத்திற்கு தேவையான செம்மையாக்கல் மேற்கொள்ள வேண்டும்.

1.5.2 கணக்கீட்டுக் கொள்கை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான எனைய தரப்பினரிற்கு குத்தகை வழங்கியுள்ள முதலீட்டு ஆதனங்களை ஒவ்வொறு ஐந்து ஆண்டுகளிற்கு ஒரு முறை தகைமையுடைய மதிப்பீட்டாளர் ஊடாக மதிப்பீடு செய்ய வேண்டிய போதும் ரூபா 69,374,150 ஆன முதலீட்டு அதனங்களை 2013 ஆண்டின் பின்னர் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யதிருக்கவில்லை.	நிறுவனம் முகம் கொடுத்துள்ள நிதி நெருக்கடி காரணமாக இந்த நடவடிக்கை தவறியுள்ளது. எவ்வாறாயினும் எதிர்வரும் கணக்குகளை தயாரிக்கும் கணக்காய்வு அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுத்து சரிசெய்ய முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது.	கூட்டுத்தாபனத்தினால் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியுள்ள கணக்கீட்டு கொள்கைகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தால் செலுத்திய வட்டி ரூபா 8,674,215 ஆன போதும், காசுப் பாய்ச்சல் கூற்றில வட்டிக் கொடுப்பனவு ரூபா 7,454,050 ஆனதில் செயற்பாட்டு நடவடிக்கைகள் ரூபா 1,220,165 இனால் அதிகரித்திருந்தது.	2020 ஆண்டில் இறுதிக் கணக்குகளில் காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கையினுள் வட்டி கொடுப்பனவாக காண்பித்துள்ள ரூபா 7,454,050 பெறுமதி உருவாகியுள்ளது நிதி வருமானமான ரூபா 1,220,165 இலிருந்து நிதிச் செலவான ரூபா 8,674,215 ஆன பெறுமதியை செம்மையாக்கியதன் பின்னர் ஏற்படும் தேறிய பெறுமதியாகும். எதிர்வரும் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது வட்டி செலவை	காசுப் பாய்ச்சல் கூற்றை சரியாக தயாரிக்க வேண்டும்.

		வெவ்வேறாக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	
(ஆ)	நீர்கொழும்பு நிறைவேற்றினால் மீளாய்வாண்டினுள் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்தல் ரூபா 10,000,000 தொகை மற்றும் நிலையான வைப்பு அகற்றுதல் ரூபா 11,147,828 ஆன போது இந்த செய்றபாடு காசுப் பாய்ச்சல் கூற்றில் வெவ்வோறான இனங்காணாது, நிலையான வைப்புக்களில் முதலீடு செய்ததாக ரூபா 167,260 தொகை மாத்திரம் இனங்காணப்பட்டிருந்தது.	பெரேட்டுக் கணக்குகளில் தேறிய தாக்கம் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் கணக்கு ஆண்டில் கணக்கு தயாரிக்கும் போது கணக்காய்வினால் சுட்டிக்காட்டியவாறு கணக்கு செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன்.	காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களை வெவ்வோறாக சமர்ப்பிக்க வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டில் செலுத்தியிருந்த பணிக்கொடை தொகை ரூபா 1,000,246 ஆன போதும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அந்த அளவு ரூபா 6,391,220 ஆனதால் ரூபா 5,390,974 இனால் செயற்பாட்டு காசுப் பாய்ச்சல் குறைத்து காண்பிக்கப்பட்டது.	காசுப் பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது இடம்பெற்றுள்ள தவறை எதிர்வரும் கணக்குகளை தயாரிக்கும் போது சரியாக சமர்ப்பிக்க முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது.	காசுப் பாய்ச்சல் கூற்றில் பணிக்கொடை தொகை கொடுப்பனவாக காசு உட்பாய்ச்சல் சரியாக இனங்காணப்பட வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டில் மீன்களை விற்பனை செய்யும் வியாபாரக் கூடங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 8,228,071 இனை செலுத்தியிருந்த போதும் காசுப் பாய்ச்சல் கூற்றில் காசு உட்பாய்ச்சளாக ரூபா 2,472,324 தொகை இனங்காணப்பட்டிருந்தது.	எதிர்வரும் கணக்காண்டில் காசுப் பாய்ச்சல் கூற்றில் சரியாக செம்மையாக்கவும் அந்த தகவல்களை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கிறேன்.	காசுப் பாய்ச்சல் கூற்றில் வியாபாரக் கூடங்களை நிர்மாணிப்பதற்கான செலவாக செலுத்திய தொகை, சரியாக இனங்காண்பட வேண்டும்.
(உ)	ரூபா 2,558,029 ஆன பொதி இருப்பு பற்றாகுறையை நடைமுறை சொத்தின் கீழ் கணக்கீடு செய்ததால் மீளாய்வாண்டின் நட்டம் அந்த பெறுமானத்தால் குறைவாக மற்றும் நடைமுறை சொத்துக்கள் கூடுதலாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	இந்த பொதி இருப்பு பற்றாகுறையை இருப்பிலிந்து அகற்றி கணக்குகளில் செம்மையாக்க முகாமைத்துவம் தீர்மானித்துள்ளதுடன் எதிர்வரும் கணக்குகளை தயாரிக்கும் போது இந்த பற்றாக்குறையை சரயாக கணக்குகளிற்கு செம்மையாக்கப்படும்.	பல ஆண்டுகளாக முன்கொண்டு வரப்படும் பொதி இருப்பு பற்றாகுறையை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஊ)	நிறைவேற்றுக்களின் கணக்குகளிற்கு இடையே இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்களினால் ஏற்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் காலப்பகுதி முடிவில் வெறிதாக வேண்டிய போதும், மீளாய்வாண்டில் தீர்க்கப்படாது ரூபா 21,842,521 ஆன அந்த மீதி இணக்கம் செய்யப்படாத மீதியாக	நிறைவேற்றுகளிற்கு இடையே இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக தீர்க்கப்படாத பிரச்சினை தன்மையின் மீது இந்த மீதி எஞ்சியுள்ளதுடன் ஏற்பனவே நிறைவேற்று நடைமுறை கணக்கினை பரீட்சித்து கணக்கீட்டை செம்மையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு	பல ஆண்டுகளாக நிலவிவரும் இணக்கம் செய்யப்படாத மீதியை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	கடன்படுனர் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது.	வருகின்றது.	
(எ)	வைத்தியசாலையினால் கட்டளை இட்ட மீன் வகைகளிற்கு பதிலாக மாற்று மீன் வகைகளை வழங்கிய காரணத்தால் 25 வைத்தியசாலைகளில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 1,425,222 ஆன 10 ஆணடுகளை விட பழைய மீதிகளை அறவிடுவது நிச்சயமற்ற நிலையில் காணப்பட்ட போதும் கழிவு நட்ட இழப்பை இனங்கண்டு இருக்கவில்லை.	இந்த மீதியை அறவிடுவதற்காக கடிதம் வைத்தியசாலைகளிற்கு அனுப்பப்பட்டுள்ள போதும் சுகாதார அமைச்சினால் கொடுப்பனவு புறக்கணிக்கப்பட்டுள்ளது. இந்த மீதி வயதுப் பகுப்பாயின் பிரகாரம் 10 ஆண்டுகளை விஞ்சிய மீதிகளாகும்.	25 வைத்தியசாலைகளில் இருந்து கிடைக்க வேண்டிய மீதிகளை விரைவில் அறவிடவும் அதற்காக கழிவு நட்ட இழப்பிற்காக செம்மையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஏ)	பல ஆண்டுகளாகக முன் கொண்டுவரப்படும் ரூபா 34,945,139 ஆன தொங்கல் கணக்கு மீதிகளை வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவற்றின் கீழ் கணக்கீடு செய்திருந்த போதும் இந்த மீதியை தீர்கக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கணக்காய்வாளர்கள் குறிப்பிட்டுள்ள விடயத்தின் பிரகாரம் தொங்கல் கணக்கின் மீதியை தீர்க்க நடவடிக்கை எடுத்துள்ளதுடன் எதிர்வரும் கணக்குகள் தயாரிக்கும் போது இந்த செம்மையாக்கலை மேற்கொள்ள முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது.	தொங்கல் கணக்கு மீதியை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு அல்லது அறிக்கைகள்

	விடயம்	**நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் பெறுமதி ரூபா**	**நேரொத்த அறிக்கை பிரகாரம் பெறுமதி ரூபா**	**வித்தியாசம் ரூபா**	**முகாமைத்துவத்தின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	வியாபார மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய மீதி	280,803,912	258,457,012	22,346,900	புராணவெல்ல, வென்னப்புவ, கருவாட்டுக் கருத்திட்டம் ஆகிய பிரிவுகள் தற்போது நீண்ட காலமாக மூடப்பட்டுள்ளதால் குறித்த தகவல்களை தேடிக்கொள்ள முடியாத நிலையில் உள்ளதுடன், எதிர்காலத்தில் இந்த தகவல்களை கண்டறிந்து மீதிகளை இணக்கம் செய்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.	எதிர்காலத்தில் இந்த தகவல்களை கண்டறிந்து மீதிகளை சமப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்..

(ஆ)	வியாபார செலுத்த வேண்டிய மீதி	321,947,802	327,867,860	5,920,058	புராணவெல்ல, வென்னப்புவ, கருவாட்டுக் கருத்திட்டம் ஆகிய பிரிவுகள் தற்போது செயலிழந்த நிலையில் காணப்படுவதால் பேரேட்டு மீதிகள் மாத்திரம் காணப்படுகின்றன. குறித்த தகவல்களை தேடிக்கொள்ள முடியாத நிலையில் உள்ளதுடன், எதிர்காலத்தில் இந்த தகவல்களை கண்டறிந்து மீதிகளை இணக்கம் செய்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.	எதிர்காலத்தில் இந்த தகவல்களை கண்டறிந்து மீதிகளை சமப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்..

1.5.5 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

	விடயம்	**தொகை ரூபா**	**சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள்**	**முகாமைத்துவத்தின் கருத்துரை**	**பரிந்துரை**
(i)	ஏனைய வியாபார பெறவேண்டியவை	66,304,514	கடன்படுனர் காலப் பகுப்பாய்வு	கணக்காய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளவாறு மிகவும் பழைய சில கணக்குகளிற்கு தேவையான பொருண்மையான மற்றும் ஆளமான கணக்காய்வு சான்றுகள் நிறுவனத்திடம் இல்லாததுடன் மேலும் குறிப்பிட்டுள்ள சில விடயங்களிற்கு ஏற்கனவே உள்ள கணக்காய்வு சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன.	மீதிகளை உறுதி செய்து கொள்ள தேவையான எழுத்துமூல சான்றுகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும்.
(ii)	ஏனைய கடன்படுனர்	8,401,785	விரிவான அட்டவணை		
(iii)	பெற வேண்டியவைகளில் உள்ளடங்கும் செயலிழந்த கடன் மீதிகள்	17,652,663	அட்டவணை, வயதுப் பகுப்பாய்வு மற்றும் மீதிகள் செயலிழந்மைக்கான காரணம்		
(iv)	வியாபார பெற வேண்டியவை	223,563,341	மீதி உறுதிப்பாடு		
(v)	வியாபார செலுத்த வேண்டியவை - செயலிழந்த கடன் மீதிகள்	22,888,294	விரிவான அட்டவணை		
(vi)	வியாபார செலுத்த வேண்டியவை	237,931,473	மீதி உறுதிப்பாடுகள் மற்றும் காலப் பகுப்பாய்வு		
(vii)	நானாவித கடன்கொடுனர்	47,812,579			

(viii)	ஊழியர் பாதுகாப்பு வைப்பு	13,173,166	விரிவான அட்டவணை	எதிர்வரும் கணக்குகளிற்கும் தற்போது உள்ள கணக்காய்வு சான்றுகளை வழங்க வேண்டும்.	
(ix)	முன்னர் செலுத்தப்பட்ட ஏனைய வைப்புக்கள்	11,925,206			
(x)	கடன் மற்றும் கடன் செலுத்துதல்	142,922,000			
(xi)	மீள் செலுத்த வேண்டிய ஏனைய வைப்புக்கள்	27,566,035	விரிவான அட்டவணை, வயதுப் பகுப்பாய்வு		
(xii)	கடன்கொடுனர்	26,555,149	விரிவான அட்டவணை, மீதி உறுதிப்பாடு குறித்த மீதிகளை உறுதி செய்து கொள்ள தேவையான மூல ஆவணம், வயதுப் பகுப்பாய்வு		
(xiii)	ஏனைய வருமானம்	3,189,252	விரிவான அட்டவணை	கணக்காய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளவாறு மிகவும் பழைய சில கணக்குகளிற்கு தேவையான பொருண்மையான மற்றும் ஆளமான கணக்காய்வு சான்றுகள் நிறுவனத்திடம் இல்லாததுடன் மேலும் குறிப்பிட்டுள்ள சில விடயங்களிற்கு ஏற்கனவே உள்ள கணக்காய்வு சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன. எதிர்வரும் கணக்குகளிற்கும் தற்போது உள்ள	மீதிகளை உறுதி செய்து கொள்ள தேவையான எழுத்துமூல சான்றுகள கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும்.
(xiv)	ஏனைய படிகள்	5,571,019			
(xv)	நிலையான வைப்பு	10,200,000	வைப்பு சான்றிதழ், வைப்பை புதுப்பிக்கும் கட்டளை மற்றும் பணிப்பாளர் சபை அங்கீகாரங்கள்		
(xvi)	9 வங்கி நடைமுறை கணக்குகளின் மேலதிக பற்று	1,015,670	மீதி உறுதிப்பாடு		
	19 வங்கிக் கணக்குகளிற்குரிய சாதகமான மீதிகள்	44,253,164			
(xvii)	வங்கி மேலதிக பற்று	48,528,540	பணிப்பாளர் சபை அங்கீகாரம்		
(xviii)	நடைமுறையல்லாத சொத்துக்கள்	499,045,595	சொத்து கணிப்பீட்டு அறிக்கை		

(xix)	தொடர்புடைய தரப்பினரிற்கு செலுத்த வேண்டிய தொகை	9,939,536	உடன்படிக்கை மற்றும் காலப் பகுப்பாய்வு	கணக்காய்வு சான்றுகளை வழங்க வேண்டும்.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு

1.6.1 பெறவேண்டிய தொகை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**முகாமைத்துவத்தின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	ரூபா 258,457,012 ஆன வியாபார மற்றும் ஏனைய வியாபர பெறவேண்டிய மீதிகளில் 5 ஆண்டுகளிற்கும் 10 ஆண்டுகளிகும் இடையிலான மீதி ரூபா 65,710,850 தொகையும் 10 ஆண்டுகளை விஞ்சிய மீதி ரூபா 17,686,140 தொகையுமாகும்.	05 மற்றும் 10 ஆண்டுகளை விஞ்சிய கடன்படுனர் மீதிகள் தொடர்பாக முடிவொன்றை எடுப்பதற்கு 2017 ஆண்டில் பணிப்பாளர் சபை பத்திரமொன்றின் ஊடாக கோரிய போதும் அதற்காக சரியான தீர்வு கிடைக்கவில்லாததுடன், எதிர்காலத்தில் இதற்கான சரியான திர்வு எடுக்கப்படும்.	வியாபார மற்றும் ஏனைய வியாபர பெறவேண்டிய மீதிகளை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2015 ஆண்டிலிருந்து நிலவிவரும் ரூபா 502,000 தொகையான காசோலை மோசடியானது, பெறவேண்டிய மீதியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதனை தீர்க்க நடடிக்கை எடுத்திருக்கவில்லை.	மிகவும் பழைய இந்த காசோலை மோசடிக்குரிய மீதி தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்க முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது.	காசோலை மோசடிக்குரிய மீதி தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை விரைவில் எடுக்க வேண்டும்.
(இ)	மீன் விநியோகித்தமைக்கு கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்திடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 5,367,000 மீதியை அறவிட அறிக்கை திகதி வரையும பொருத்தமான நடடிக்கை டுத்திருக்கவில்லை..	கொண்டோலா என நிறுத்தி வைத்துள்ள தொகையை பெற்றுத் தருமாறு பலமுறை எழுத்து மூலம் கோரியுள்ள போதும் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் குறித்த தொகையை செலுத்த வேண்டாம் எனவும் புத்தகளிலிருந்து பதிவழிக்குமாறும் 2017 செப்டம்பர் 25 திகதிய கடிதம் மூலம் லங்கா சதோச லிமிடட் இனது தவிசாளரின் கையொப்பத்துடனான கடிதம் மூலம் குறிப்பிட்டுள்ளது.	இந்த கடன் மீதி தொடர்பான உடன்படிக்கையை பரீட்சித்து தேவையான செம்மையாக்கங்கள நிதிக்கூற்றுனுள் செய்ய வேண்டும்.

1.6.2 செலுத்த வேண்டிய தொகை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	**முகாமைத்துவத்தின் கருத்துரை**	**பரிந்துரை**
ரூபா 172,852,137 ஆன வியாபார செலுத்த வேண்டிய மீதியின் 1 ஆண்டை விஞ்சிய மற்றும் 2 ஆண்டுகளைவிட குறைந்த மீதி	வயது பகுப்பாய்வு அறிக்கை பிரகாரம் 01 ஆண்டை விஞ்சிய 02 ஆண்டுகளைவிட குறைந்த மற்றும் 2	வியாபார செலுத்த வேண்டிய மீதிகளை செலுத்த நடவடிக்கை எடுக்க

	ரூபா 99,523,305 ஆனதுடன் 2 ஆண்டுகளை விஞ்சிய மீதி ரூபா 73,328,832 ஆனது.	ஆண்டுகளை விஞ்சிய பாரிய மீதிகள் காணப்படும் மற்றும் சில நிறைவேற்றுக்கள் மூடப்பட்டுள்ளதுடன் அந்த நிறைவேற்றுக்களினால் எவ்வித கொடுப்பனவும் இடம்பெறாததால் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தினுள் நிலவும் சீரற்ற நிதி நிலைமையின் மீது பழைய மீதிகளை செலுத்த முடியாதுள்ளது.	வேண்டும்.

1.7 சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மைகள்

சட்டம், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணக்கமின்மைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை 371(5) மற்றும் 2020 ஆகஸ்ட் 28 இன் 01/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 9 பிரிவு	அலுவலர்களிற்கு வழங்கப்படும் உப கட்டுநிதி பணி முடிவடைந்த திகதி முதல் 10 நாட்களினுள் தீர்க்க வேண்டிய போதும் 108 கூட்டுத்தாபன அலுவலர்களிற்கு வழங்கியுள்ள கூட்டுத் தொகை ரூபா 1,102,060 ஆன உப கட்டுநிதிகள் 1 நாள் முதல் 271 நாட்கள் வரை தாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்தன.	2020 ஆண்டில் நிலவிய கொவிட் தொற்று நிலைமையினுள் மீன்பிடி கூட்டுத்தாபன ஊழியர்கள் உரியவாறு கடமைக்கு அறிக்கையிடவில்லை. இக் காலப் பகுதியில் (108 அலுவலர்கள்) பெற்றுக் கொண்ட கட்டுநிதிக்கான முற்பணம் தீர்பனவும் தாமதித்துள்ளது.	சுற்றறிக்கை பிரகாரம் உப கட்டுநிதியை உரிய காலஎல்லையினுள் தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ) 1971 இன் 38 இலக்க நிதிச் சட்டத்தின் 16 (2) பிரிவு	வங்கி மேலதிக வசதியை பெற்றுக் கொள்ளும் போது விடயப் பொறுப்பு அமைச்சரின் மற்றும் நிதி அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டிய போதும் அவ்வாறு முறையான அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதி வரை ரூபா 48,528,540 வங்கி மேலதிக பற்று வசதியை	எதிர் காலத்தில் வங்கி மேலதிக வசதியை பெற்றுக் கொள்ளும் போது விடயப் பொறுப்பு அமைச்சரின் மற்றும் நிதி அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது.	நிதிச் சட்டத்தின் 16 (2) பிரிவு பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	கூட்டுத்தாபனம் பெற்றிருந்தது.		
(இ)1983 இன் 12 இலக்க பணிக்கொடை செலுத்தும் சட்டத்தின் ii ஆம் பிரிவின் (5) (1) உப பிரிவு	பணிக்கொடை நிதியத்திற்கு உரிமையுடைய ஏதேனும் ஊழியர் ஒருவர் நீங்கும் போது 30 நாட்களிற்குள் அந்த உரிமையை உடையவரிற்கு பணிக்கொடை தொகையை செலுத்த வேண்டிய போதும் கூட்டுத்தாபனம் அதன் பிரகாரம் கொடுப்பனவு செய்யாததால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு செலுத்த வேண்டிய பணிக்கொடை மீதி ரூபா 13,315,779 ஆனதுடன் மீளாய்வாண்டிற்கான மிகை அறவீடு ரூபா 1,988,869 தொகையும் 2020 ஆண்டு இறுதி வரை செலுத்த வேண்டிய மொத்த மிகை அறவீடு ரூபா 3,188,430 தொகையுமாகும். மேலும் 2025 ஏப்ரல் 30 திகதி வரை செலுத்தப்படவுள்ள பணிக்கொடை மற்றும் மிகை அறவீடுகளின் மீதி ரூபா 22,183,769 ஆனது.	இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தில் நிலவும் நிதி நெருக்கடி காரணமாக பணிக்கொடை தொகை மீதி காணப்படுவதுடன் எதிர்காலத்தில நிதி நிலைமை சீராகும் நிலைமை காணப்படுவதுடன் மிக விரைவில் இந்த கொடுப்பனவுகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	பணிக்கொடை செலுத்தும் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் செலுத்த வேண்டிய பணிக்கொடை தொகையை செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)2018 இன் 18 இக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 18(4) பிரிவு	நிறுவனத்தினால் கணக்காய்வு கட்டணத்திற்காக கணக்கு பட்டியல் பத்திரத்தின் திகதியிலிருந்து 30 நாட்களிற்குள் செலுத்தி தீர்க்க வேண்டிய போதும் கூட்டுத்தாபனத்தினால் 2013 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணமாக ரூபா 5,383,530 தொகை காணப்பட்டது.	கணக்காய்வில் சுட்டிக் காட்டிய விடயம் தொடர்பாக இணங்குகிறேன். பல ஆண்டுகளாக நிறுவனத்தில் நிலவு நிதி நெருக்கடியின் முன் கணக்காய்வு கட்டணம் உரிய கால எல்லையினுள் செலுத்த முடியாதுள்ளதுடன் எதிர்காலத்தில் நிதி நிலைமை சீரானவுடன் செலுத்த நடவடிக்கை எடுக்கிறேன்.	தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ) 2009 இன் 9 இலக்க தேசத்தை கட்டியெழுப்பு வரிச் சட்டத்தின் 4 பிரவு	தேசத்தை கட்டியெழுப்பும் வரி உரிய காலாண்டு முடிந்தவுடனே அடுத்துவரும் மாதத்தின் இருபதாம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளரிற்கு	வரித் தொகையை உரிய காலப் பகுதிக்குள் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்ப முடியாமைக்கு காரணமாக அமைந்தது நிறுவனத்தில் நிலவிய	தேசததை கட்டியெழுப்பு வரிச் சட்டத்தின் 4 பிரவு பிரகாரம் தேசததை கட்டியெழுப்பு வரித்

	அனுப்பப்பட வேண்டிய போதும், 2020 திசெம்பர் 31 திகதியன்று 2015 முதல் 2019 கால எல்லைக்குரிய ரூபா 95,519,939 தொகை செலுத்த வேண்டிய சேத்தை கட்டியெழுப்பும் வரி மீதியானது.	நிதி நெருக்கடி ஆகும். மேலும் 2024.12.31 திகதிக்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தப்படவுள்ள தொகை ரூபா 85,169,312.48 ஆகும்.	தொகையை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற் கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஊ) 2002 இன் 14 இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் சட்டத்தின் 26 ஆம் பிரிவு	சட்டத்திற்கு முரணாக 2002 முதல் 2009 ஆண்டு வரை மற்றும் 2015 முதல் 2019 ஆண்டு வரையான காப் பகுதிக்குரிய செலுத்தப்படாத கூட்டுத் தொகையினுள் பெறுமதி மீது வரிக் கடப்பாடு ரூபா 27,046,439 ஆனது.	நிறுவனத்தில் நிலவிய நிதி நெருக்கடியின் முன் உரிய காலப் பகுதியில பெறுமதி சேர்க்கப்பட்ட வரி உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்ப முடியவில்லை. எனினும் 2020.12.31 திகதிக்கு வழக்கு நடவடிக்கைகள் தொடர்பாக கடந்த பல ஆண்டுகளில் அடிக்கடி கொடுப்பனவு செய்ததன் மீது 2024.12.31 திகதிக்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியுள்ள வரி பெறுமதி ரூபா 21,519,043.00 ஆகும்.	பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் பிரகாரம் பெறுமதி சேர்க்கப்பட்ட வரித் தொகையை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற் கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(எ) 1958 இன் 15 இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தின் 15 பிரிவு	தொழிற்தருனரினால ஒவ்வொறு ஊழியரினதும் பங்களிப்புத் தொகையை அந்த ஊழியர்களின் உழைப்பிலிருந்து கழத்து அடுத்த மாதம் இறுதித் திகதிக்கு முன்னர் நிதயத்திற்கு செலுத்த வேண்டிய போதும் உரிய திகதிக்கு செலுத்தாத காரணத்தால் 2020 திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 353,045,586 தொகை மற்றும் ரூபா 256,954 தொகையான மிகை அறவீடு செலுத்த வேண்டியதாக நிலவியது.	நிறுவனம் தொடர்ந்தும் முகம் கொடுத்துள்ள நிதி நெருக்கடி காரணமாக EPF மற்றும் ETF தொகையை கால நேரத்திற்கு செலுத்த முடியாது போனது. எனினும் இந்த நிலுவை EPF மற்றும் ETF தொகையிலிருந்து ஒரு பகுதியை செலுத்த நடவடிக்கை எடுத்துள்ளதுடன் எஞ்சிய நிலுவைத் தொகையை செலுத்தி தீரக்க பொது திறைசேரியிடம் உதவித் தொகையொன்று கோரப்பட்டுள்ளது.	ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தின் 15 பிரிவு பிரகாரம் உரியவாறு கால நேரத்திற்கு பங்களிப்புத் தொகை அனுப்பப்பட வேண்டும்.

(ஏ) 1980 இன் 46 இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சட்டத்தின் ii பகுதியின் 16 (i) பிரவு	பங்களிப்புத் தொகையை அடுத்து வரும் மாதத்தின் இறுதித் திகதிக்கு அல்லது அத்திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டிய போதும், பங்களிப்புத் தொகையை உரிய திகதியில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்தாத காரணத்தால் மீளாய்வாண்டு இறுதித் திகதிக்கு ரூபா 20,900,575 தொகை செலுத்த வேண்டியிருந்தது.	நிறுவனம் தொடர்ந்தும் முகம் கொடுத்துள்ள நிதி நெருக்கடி காரணமாக EPF மற்றும் ETF தொகையை கால நேரத்திற்கு செலுத்த முடியாது போனது. எனினும் இந்த நிலுவை EPF மற்றும் ETF தொகையிலிருந்து ஒரு பகுதியை செலுத்த நடவடிக்கை எடுத்துள்ளதுடன் எஞ்சிய நிலுவைத் தொகையை செலுத்தி தீரக்க பொது திறைசேரியிடம் உதவித் தொகையொன்று கோரப்பட்டுள்ளது.	1980 இன் 46 இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சட்டத்தின் பிரகாரம் உரியவாறு கால நேரத்திற்கு பங்களிப்புத் தொகை அனுப்பப்பட வேண்டும்.
(ஐ) 2003 ஜூன் 02 இன் 12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பிரிவு	நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் நிறுவனத்திற்குரிய நிதிக்கூற்றுக்களை கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்ப வேண்டிய போதும், 2020 ஆண்டிற்குரிய கணக்குகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்து 3 ஆண்டுகள் 11 மாதங்கள் தாமதத்துடனாகும் அதாவது 2025 சனவரி 29 திகதியாகும்.	நிதிக்கூற்றுக்களை உரிய திகதிக்கு கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க முடியாது போனதால் 2021 முதல் 2024 வரை கணக்குகள் கணக்காய்வு செய்யப்பட வேண்டியுள்ளன.	பொது முயற்சிகள் சுற்றறிக்கை பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் நகழ் வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(ஒ) 2018 ஏப்ரல் 27 திகதிய எம்எஸ்டீடப்/08 /65 இலக்க நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சினால் வெளியிடப்பட் கடிதம்	கூட்டுத்தாபனத்தினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் சுட்டிகளை இனங்கண்டு அந்த நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ள ஒருங்கணைப்பு செய்ய அலுவலர்களை நியமித்து நிலைபேறான அபிவிருத்தி நிகழ்சித் திட்டங்களை தயாரித்திருக்கவில்லை.	இது தொடர்பாக நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருவதுடன் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் மீது இந்த நிகழ்சித் திட்டம் இடை நடுவே நின்றுள்ளது.	நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சினால் வெளியிடப்பட் கடிதம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஓ) 2017 திசெம்பர் 21 திகதிய 02/2017 இலக்கம் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை 2 (i) பரிவு	பதிவு உரிமையின்றி பயன்படுத்தப்படும் வாகனங்கள், பதிவு உரிமையுள்ள நிறுவனத்தின் இணக்கப்பாட்டுடன் தமது நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்து கொள்ள அல்லது பதிவு உரிமையுள்ள நிறுவனத்திற்கு ஒழுங்காக ஒப்படைக்க நடவடிககை எடுக்க வேண்டிய போதும், 2016 மற்றும் 2024 கால எல்லைகுரியதாக கடற்றொலில் அமைச்சு மற்றும் விவசாய திணைக்களத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியுள்ள 04 வாகனங்களையும் அறிக்கை திகதி வரை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கருத்துத் தெரிவிக்கப்பட்டு இருக்கவில்லை.	சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை பிரகாரம நடவடிக்கை எடுக்க வேண்டும்..
(ஔ) 2006 இன் பெறுகைகள் வழகாட்டிக் கோவை			
(i) பந்தி 3.4.3	கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டிற்காக நாளாதுவரையாக்கிய பதிவு செய்த வழங்குனர் பதிவேடொன்றை பேணிக் கொண்டிருக்கவில்லை.	கொரோனா நிலைமையில் பெறுகைகள் செயன்முறை, ஊழியர் வருகை பலவீனம் காரணமாக உரியவாறு இடம்பெறவிலலை.	பெறுகைகள் வழகாட்டிக் கோவை பிரகாரம் பதிவு செய்த வழங்குனர் பதிவேடொன்றை பேணிக் கொள்ள வேண்டும்.
(ii) பந்தி 4.2.1	குறைந்தபட்சம் 03 வருட காலத்திற்கு எதிர்பார்ககும் பெறுகைகள் நடவடிக்கைகளை உள்ளடக்கிய பிரதான பெறுகைகள் திட்டமொன்றை தயாரிக்க வேண்டிய போதும் அறிக்கை திகதி வரையும் அத்திட்டத்தை மற்றும் அதற்குரிய பணிப்பாளர் சபை அங்கீகாரத்தை சமர்ப்பித்திருக்கவில்லை.	2020 ஆண்டின் பெறுகைகள் திட்டத்தை தயாரித்து சமர்ப்பிக்க கொரோனா தொற்று நிலைமையின் மீது இயலாது போனது.	பெறுகைகள் வழகாட்டிக் கோவை பிரகாரம் பிரதான பெறுகைகள் திட்டமொன்றை தயாரிக்க வேண்டும்.
(iii) பந்தி 4.2.2	கூட்டுத்தாபனத்தினால் 2020 ஆண்டிற்காக ஒவ்வொறு பெறுகைகள் செயற்பாடுகளினதும் படிமுறைகளையும்	கொரோனா நிலைமையில் பெறுகைகள் செயன்முறை, ஊழியர் வருகை பலவீனம் காரணமாக உரியவாறு	பெறுகைகள் வழகாட்டிக் கோவை பிரகாரம் பெறுகைகள் அட்டவணையொ

காலவாரியாக விபரிக்கும் இடம்பெறவிலலை. பெறுகைகள் அட்டவணை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.		ன்றை தயாரிக்க வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா ரூபா 140,755,130 ஆன பற்றாக்குறை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 163,479,625 ஆனது. அதன் பிரகாரம் பற்றாக்குறை ரூபா 22,724,495 இனால் குறைவடைந்திருந்தது. இந்த பற்றாக்குறை குறைவடைய விற்பனை கிரயம் ரூபா ரூபா 62,814,236 இனால் குறைவடைந்தமை மற்றும் நிர்வாக செலவு ரூபா 12,639,930 இனால் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

2.2 வீதப் பகுப்பாய்வு

சிறந்த நடைமுறை விகிதம் 2:1 ஆக வேண்டிய போதும் 2020 ஆண்டின் கூட்டுத்தாபனத்தின் நடைமுறை விகிதம் 0.51 ஆனதுடன் சிறந்த விரைவு விகிதம் 1:1 ஆக வேண்டிய போதும் கூட்டுத்தாபனத்தின் அந்த விகிதம் 0.44 ஆக காட்டப்படுவதால் குருங்கால பொறுப்புக்களை தீர்த்துக் கொள்ள முடியாதுள்ளதாக அவதானிக்கப்பட்டது. திரவத்தன்மை அளவீடொன்றான காசு விகிதம் பூச்சியத்திற்கு கிட்டிய பெறுமானத்தை (0.059) எடுத்திருந்ததால் குருங்கால பொறுப்பை மேவுகை செய்ய கூட்டுத்தாபனத்திற்கு இயலுமை இல்லாததால் செயற்படு மூலதன பிரச்சினை தீவிரமடைந்துள்ளதாக அவதானிக்கப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவத்தின் செயற்திறமையின்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2020 திசெம்பர் 31 திகதி வரை கூட்டுத்தாபனத்தினால் 65 வங்கிக் கணக்குகளை பேணிச் சென்றிருந்ததுடன் அவற்றில் 17 கணக்குகளிற்குரியதாக அத் திகதியில் கூட்டுத் தொகை ரூபா 48,528,540 ஆன வங்கி மேலதிக பற்று வசதிகளை பெற்றிருந்தது. 2020 திசெம்பர் 31 திகதி வரை அக் கணக்குகளிற்குரிய மேலதிக பற்று வட்டி ரூபா 6,032,375 அனது. மேலும் கூட்டுத்தாபனத்தின் வங்கிக் கணக்குகளில் 2025 பெப்ரவரி 27 திகதி வரை 42 வங்கிக் கணக்குகள் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளாத செயலிழந்த கணக்குகளாக இனங்காணப்பட்டிருந்தது.	இலங்கை வங்கி மூலம் பெற்றுக் கொண்ட குருங்கால கடன் தொகை மற்றும் மேலதிக பற்று வசதிகளை தீர்க்காததன் மீது இலங்கை வங்கியின் திறக்கப்பட்டுள்ள அனைத்து கணக்குகளையும் செயலற்றதாக்க அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். தற்போது இது தொடர்பாக கலந்துரையாடி கொடுப்பனவு திட்டமொன்றை முன்வைத்துள்ளதுடன் எதிர்காலத்தில் இந்த கணக்குகளை மீண்டும் செயற்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் வங்கி கடன் வசதிகளை பெற்றுக் கொள்ள முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது.	மேலதிக பற்று வட்டியை உரியவாறு செலுத்த வேண்டியதுடன் செயலிழந்துள்ள வங்கி கணக்குகள் தொடர்பாக மீண்டும் வங்கியுடன் கலந்துரையாடி தீர்த்துக் கொள்ள வேண்டும்.